




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

THE BEST WISHES



LEMINATING, PHOTO COPY, DUPLER
& FASHIONABLE FURNITURE



# CHARLS GROUP

**245, BANK SITE**
**ANURADHAPURA.**
**TEL : 025-2222763**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நல்லன காணவும்
நல்லவற்றோடு இணையவும்
முயல்பவர்களின் எண்ணிக்கை
சிறியதாக இருப்பினும்,
முயற்சியின்மையிலும் பார்க்க
மேலானது.

## மல்லிகை

**அநுராதபுரம் மாவட்ட மலர்**

அநுராதபுரம் பிரதேசத்தில்
வாழும்
படைப்பாளிகளிடம்
இருந்து
புதிய, தரமிக்க
ஆக்கங்களையும்
விளம்பரங்களையும்
இவ்விதழுக்காக
எதிர்பார்க்கிறோம்

தொடர்புகளுக்கு
**அன்பு ஜவஹர்ஷா**
20,Jayanthi Mawatha,
Anuradhapura.
025-2223788

# படிகள்

மார்ச் -மே
2006

இருமாத
இலக்கிய இதழ்

-வெளியீடு-
அநுராதபுரம் நட்சத்திர நற்பணி
மன்றம். ASWA

தனிப்பிரதி 20.00
தபால் மூலம்-25.00
வருட சந்தா-120.00

காசுக்கட்டளை, காசோலை
அனுப்பவேண்டிய முகவரி
J.M.F.Saman
102,Yasasiripura,
Anuradhapura.
(Anuradhapura-post office.)

தொடர்புகளுக்கு
எமது புதிய முகவரி
The Editor,
Padihal
30,Jayanthi Mawatha,
Anuradhapura.

Tel: 025-4580336
: 025-2223884
078-5341511



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உங்கள் பார்வைக்கு எங்கள் கருத்து

அநுராதபுர மாவட்ட தமிழ் இலக்கிய நகர்வுகளில் வளர்ச்சி தென்படுகிறது. இலக்கிய நண்பர்களிடம் புது உத்வேகம் கிளர்ந்து பிரவகிக்கிறது. இந்தப் பின்னணிக்கு படிகளின் இடைவிடாத வருகையும் வழி சமைத்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. தவிரவும் அநுராதபுரி கலை-இலக்கிய வட்டத்தின் அநுராகம் இதழின் மீள் வருகையும் இந்தப் பின்னணிக்கு வலு சேர்த்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விரைவில் மல்லிகை அநுராதபுரம் சிறப்பிதழும் முகிழ்வதற்கான செயற்பாடுகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இது சாத்தியமாகும் விடத்து, அநுராதபுர மாவட்ட தமிழ் இலக்கியத்தின் மற்றொரு மைல் கல்லாக அமையும் என்பது திண்ணம். இதற்கு இலக்கிய நண்பர்கள் சிரமம் பாராது தமதான பங்களிப்பை நல்க, ஆத்மார்த்தமாக முனைய வேண்டும்.

குறிப்பாக ஆக்கங்களும், விளம்பரங்களும் இன்றியமையாததாக இருக்கின்றன. ஆக்கங்களை இயலுமானளவு விரைவாக எழுதியனுப்ப ஆவன செய்யுங்கள்.

அத்தோடு மல்லிகை போன்ற தரமான இலக்கிய இதழ்களை படித்து வர முனையுங்கள். தவிரவும், இடையறாது ஆக்கங்களும், விமர்சனங்களும் எழுதுங்கள். இவை இலக்கிய ஆளுமைக்கு வழிசமைக்கும்.

-ஆசிரியர்-


# படிகள்

இருமாத
இலக்கிய இதழ்

-ஆசிரியர்-
ஏ.எஸ்.ஷர்மிலா பேகம்.

-உதவியாசிரியர்-
எல்.வஸீம் அக்ரம்

-சஞ்சிகைக் குழு-
எம்.சி.நஜிமுதீன்
ஜே.எம்.எப்.சமான்
எம்.ஐ.எம்.பீர்னாஸ்
எம்.சஹ்ரீன் அஹமட்.

-வெளியீட்டுக் குழு-
எஸ்.எம்.பாரீஸ்
எஸ்.ஏ.சதாத்
யூ.எம்.ஹிமாஸ்
எம்.எம்.எம்.அர்ஷாட்
எம்.ஜே.எம்.றிஸாதி
எம்.ஆர்.எம்.பெரோஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல் தோன்றி மண்தோன்றாக் காலத்துப் பழைமை வாய்ந்தது எம் தாய் மொழியாம் தமிழ் மொழி. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது ஒன்றுங் காணோம்" என்ற பாரதியின் கூற்று இங்கு நினைவு கூறத்தக்கது. இத்தகைய இனிமையும் தொண்மையும் கொண்ட தமிழ் மொழியிலே அன்று தொடக்கம் இன்று வரை பல்வேறு இலக்கியங்கள் தோன்றியுள்ளன; இன்றும் தோன்றுகின்றன. எதிர்காலத்திலும் தோன்றும் என்பது கண்கூடு. இவ்விலக்கியங்கள் தான் எழுந்த காலத்தின் சமுதாயப் பண்பாட்டுப் பாரம்பரிய விழுமியங்களைப் பறைசாற்றி நிற்பவை இதனாற்றான் இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடிகள் எனப்படுகின்றன.

இனி இவ்விலக்கியங்கள் காலத்தின் கண்ணாடிகளாக அமையுமாற்றை எடுத்து நோக்குவோம். தமிழ் இலக்கியப் போக்கினைத் தேடி ஆராய்ந்து தொகுத்தளித்த சான்றோர் அவ்விலக்கிய வளர்ச்சிக் கட்டங்களை சங்ககாலம், சங்கமருவிய காலம் என வகைப்படுத்தி இருபதாம் நூற்றாண்டு வரை ஏழு கால கட்டங்களாக வகுத்துள்ளனர்.

இவற்றுள் இலக்கிய வளர்ச்சியின் ஆரம்பமாக அமைவது சங்ககாலமே. இக்காலம் தொடக்கம் தோன்றிய இலக்கியங்களை எடுத்து நோக்குவதன் மூலம் காலத்தின் கண்ணாடியாக இலக்கியங்கள் அமைந்த முறையினை அறிய முடியும்.

இயற்கை நெறிக் காலம் என அழைக்கப்பட்ட சங்க காலத்தில் அகத்திணை, புறத்திணை சார்பான இலக்கியங்கள் தோன்றின.

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் உந்தையும் எம்முறை கேளிர்"

எனும் சங்கச் செய்யுள் அகத்திணை பொருள் மரபுக்கு எடுத்துக் காட்டாக அமைவதெனக் காணலாம். மேலும் "கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி..."

# இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடிகள்

-யூ. எம். ஹிமாஸ்-

"ஊர்க்கால் நிவந்த பொதுப் பொருள் எனப் பல் வேறு செய்யுள்களை மேற் கோலாகக் கொள்ளலாம். அது மட்டுமன்றி, சங்க காலத்தில் தோன்றிய பாட்டு நூல்கள், புறத்திணை நூல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்பனவும் அக்காலப் புலவர்களின் புலமையையும் அவற்றை நன்கறிந்த அரசர்களின் கொடைச் சிறப்புகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. எனவே இவற்றிலிருந்து இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடிகள் என்பதனை விளங்கிக் கொள்ள முடிகிறது.

அது மட்டுமன்றி இதனைத் தொடர்ந்து வந்த சங்கமருவிய காலத்திலே அறக்கருத்துக்கள் நிறைந்த இலக்கியங்கள் அதிக மாகத் தோன்றியுள்ளன. திருக் குறள் முதல் நாலடியார் வரை யுள்ள பதினென் கீழ்க் கணக்கு நூல்கள் பலவும் இரட்டைக் காவி யங்களான மணிமேகலை சிலப்ப திகாரம் என்பனவும் அறத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதிலிருந்து அறநெறிக் காலமான சங்கமருவிய கால இலக்கியப் போக்கினை படம் பிடித்துக் காட்டுவதாக அமைவதனைக் காண முடியும். திருகுறளில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் எனும் முப்பால்களும் அற வழியுடன் பாடப்படாமையில் இருந்தும் இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடிகளாக அமைவதனைக் காண முடியும்.

சமய வழிச் சிந்தனைகள் போற்றப்பட்ட சங்கமருவிய கால த்தைத் தொடர்ந்து வந்த பல் லவர்க்காலமும் காலத்தின் போக்கிற்கிணங்க, எழுந்த இலக் கியங்களை தன்னகத்தே கொண் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பக்தி நெறிக்காலம் எனப்பட்ட இக் காலத்தில் பிரபந்தங்கள், திரு முறைகள், தோத்திரப் பாடல்கள் என பல தோற்றம் பெற்றமை அக்காலத்தில் வாழ்ந்த ஆழ்வார்கள், காலன் மார்க்ஸின் பக்தி வாழ் விலிருந்தும் அக்கால இலக்கியங்களின் இயல்பினை விளங்கிக் கொள்ளலாம்.

மேலும் காவிய காலம் எனப் போற்றப்பட்ட சோழர் காலத்தில் தோன்றிய கம்பரா மயணம், கந்த புராணம் எனும் பேரிலக்கியங்கள் அக்காலத்தில் காணப்பட்ட சமய பக்தி, இலக் கியச் செழுமை, உலகியல் தன்மை அரசியல், பொருளாதார வளங்கள் என்பவற்றை எடுத்துக் காட்டுபவனாக காணப்ப டுகின்றன.

இக்காலத்தில் தோன்றிய பெருங்காப்பியங்கள், சிறு காப்பியங்கள், சிற்றி லக்கியங்கள் இலக்கண நூல்கள் எனப் பல்வகையில் இருந்தும் அக்காலச் சூழ் நிலைகள் தெளிவாகக் காட்டப்படுவதிலிருந்தும் இலக்கி யங்கள் காலத்தின் கண்ணாடிகளாக அமைந்து ள்ளதைக் காணலாம்.

இவ்வாறே நாயகர் காலத்தின் போக்கினை அக்காலத்தில் தோன்றிய பிரபந்தங்கள் தத்துவக் கருத்துள்ள நூல்கள் உரைநடை இலக்கியங்கள் என்பன எடுத்துக் காட்ட ப்படுகின்றன. அக்கால இலக்கிய சொல் நெறியை அவை தெளிவாக பறைசாற்றி நிற்கின்றன. கவிச் செருக்கும் சிலேடைக் கவிகளும் தோன்றிய நாயக்கர் காலத்தின் இலக்கியப் பயணத்திற்கு காலமேகர் புலவர் பாடிய

"சுருக்கவிழ்ந்த முன் குடுமிச் சோலியா
சோற்றுப் பெருக்குலர்த்த வாயா
நாயே பேயே குரங்கே உனை
ஒருத்தி போட்டாலே வேலையற்றுப் போய்.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனும் செய்யுள் எடுத்துக் காட்டாகும் இதுவும் இக்கால இலக்கியங்களுக்கு எடுத்துக்காட்டாக அமைவதிலிருந்தும் இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாக அமைவதினைக் காணலாம்.

உரை நடை இலக்கியங்கள் அதிகமாகத் தோன்றிய ஐரோப்பியர் காலம், இருபதாம் நூற்றாண்டு என்பனவும் இவ்வாறே காணப்படுகின்றன. பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள் பெருவாரியாக தோன்றிய இவ்விரு காலங்களும் உரை நடை இலக்கியம் உச்ச வளர்ச்சி கண்ட காலங்களாகும். இக்காலங்ளில் நாவல், சிறுகதை, நாடகம், விமர்சனம், கவிதை எனப்பல வடிவில் இலக்கியங்கள் பிரசவிக்கப்பட்டன. இவை அவ் வக்கால சமூகப் பொருளாதார த்தை பறை சாற்றுபவை.

மேலே காட்டப்பட்ட விடயங்கள் உட்பட இன்னும் பல இலக்கியங்கள் அவ்வக்காலத்தின் போக்கினை காட்டி நிற்கின்றன. இவற்றிலிருந்து எடுத்து நோக்கும் போது ஒவ்வொரு காலத்திலும் தோன்றிய இலக்கியங்கள் அக்காலத்தின் கண்ணாடிகளாக விளங்கு கின்றன என்பது தெளிவாகின்றது.

படைப்பாளிகளிடமிருந்து
புதிய ஆக்கங்களையும்
காத்திரமான விமர்சனங்களையும்
எதிர்ப்பார்க்கிறோம்.

**படிகள்**
**கிடைக்குமிடங்கள்**

வெளிகம புத்தக நிலையம்
அநுராதபுரம்

எம்.எம்.எம்.ஹபீல்
கோல்ட் டெக்ஸ்ட்
ஹொரௌெவ்பொதானை.

ஹிமாஸ் புக் ஷொப்
இகிரிகொல்லாவ.

ஜே.எம்.பர்ஹான்
பண்டாரபொதான
கெகிராவ.

இன்போசிஸ்
அநுராதபுரம்.


**வெளிவந்து விட்டது**

கெகிராவ சஹானாவின்
இன்றைய
வண்ணாத்துப்பூச்சிகள்
கவிதை நூல்

32/21, செக்குப்பிட்டிய
சௌத்
செக்குப்பிட்டி
கெக்கிராவ.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இரும்பு முகம் பற்றிய பிரத்தியேகக் குறிப்புகள்

எனது உயிரைக் கீறிச் சிதைப்பதான ஆர்ப்பரிப்பில்
நீ காறி உமிழ்கிற கரியமில வார்த்தைகளால்
ஒவ்வொரு நாளும் வடுப்படுகின்றன
வளித்துணிக்கைகள்

உனது முழக்கம் உருக்கொள்ளத் தொடங்கும் போது
இன்னொரு லோகத்தில் பிரசன்னம் கொள்ளும்
வரத்தை
இச்சித்திருக்கும் என் காதுகள்

எங்கள் வீட்டுச் சுவர்களை முன்னிறுத்த
எல்லைப் பிரகடனம் செய்கிறாய்
கிரீடம் புனையாத சக்கரவர்த்தி நீயெனவும்
நான், எனையனைவர்
நினது சேவகர் குழாத்தை சேர்ந்தவர் எனவும்

கம்பீர மாயை நிறைந்து வழிய வீற்றிருக்கும்
உனது பார்வையில்
அதீத தன்னிறைவு ஒப்பீடற்கரிய இடாம்பீகம்
அத்தோடு புலன் முன் தோன்றாப் பொருளாய்
அவ்வப்போது வெளிப்படுகின்ற விகாரம்



சாட்டை வீச்சின் விசையோடு
'சர்'ரென்று கிளம்பு முன் ராஜ மொழி
ஒவ்வொரு நாளும் பரீட்சிக்கிறது
எனது சகிப்புத் தன்மையை.

பேதை, அபலை, விதவை, விபச்சாரி
இப்படி ஆண்பாற் சொல் அதிகம் அறியப்படாத
அடைமொழிகளில் ஏதோவொன்றுக்குள்
அடக்கப் பார்க்கிறாய் என்னை.

நானோ எனது மௌனப் பொழுதுகளில்
சேமித்து வருகிறேன்
நீ சபித்து திணிக்கும் இருளை
விஞ்சி எழுவதற்கான விகாசத்தையும்
அந்த நாளில்
உன்னிடம் கேட்பதற்காக
எண்ணற்ற கேள்விகளையும்..

தவ சஜிதரன் (தாட்சண்யா)
(2005.10.12)
ஒளியின் மழலைகள் கவிதை நூலிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# செவ்வி

**எம்.அஷ்ரப் கான் அவர்களுடன்....**

*சந்திப்பு- படிகள்*

> **வானொலி நாடகம் எனக்கு இறைவன் தந்த ஒரு வரம். 'எது இலாபம்' எனும் எனது முதல் நாடகமே முஸ்லிம் நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட ஒரு ஆர்வம் உயிரோடு கலந்து விட்டது.**

- *நீங்கள் இற்றை வரைக்கும் சுமாராக எத்தனை நாடகங்களை எழுதியிருக்கீறீர்கள்?*

1958 தொடக்கம் இன்று வரை எழுதிக்கொண்டிருக்கிறேன். இலங்கையில் மட்டுமல்ல உலகத்திலே அதிக நாடகங்கள் எழுதியவன் நானாகத்தான் இருக்க முடியும். அந்தளவுக்கு விடாமல் எழுதியுள்ளேன். எத்தனை நாடகங்கள் எழுதினேன் என்ற பதிவுகள் இல்லை. அவை நூற்கள் கணக்கும் இருக்கலாம்

- *நீங்கள், சிறுகதைகள், திரைக்கதைகள் தொலைக்காட்சி நாடகங்களையும் எழுதியிருக்கிறீர்கள். அவ்வாறிருக்க, உங்கள் கவனம் அதிகமாக நாடகங்கள் பக்கம் செல்லக் காரணம் என்ன?*

வானொலி நாடகம் எனக்கு இறைவன் தந்த ஒரு வரம். 'எது இலாபம்' எனும் எனது முதல் நாடகமே முஸ்லிம் நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட ஒரு ஆர்வம் உயிரோடு கலந்து விட்டது. அப்போது நான் ஒரு பள்ளி மாணவன். என் வயதை ஒத்தவர்கள் "சிறுவர் மலரு"க்கு கட்டுரைகளும் சிறு துணுக்குகளும் எழுதிக் கொண்டிருந்த போது எனது நாடகங்கள் வானொலியில் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தன. அது எப்படி வந்தது என்று என்னால் சொல்ல முடியவில்லை. என் இதயத்துள் ஆயிரம் ஆயிரம் ஆத்மாக்கள் உயிர்கள், பாத்திரங்கள் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொண்டிருந்த காரணமாக இருக்கலாம். அது நான் கண்டு கொள்ளாத மர்மம். ஆனால் அவர்கள் இன்னும் என்னோடு தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் குரலை நான் தான் உலகத்திற்கு சங்கு முழங்க வேண்டும் என்பது இறைவன் எனக்கு வழங்கிய கட்டளை. நான் மனித இதயங்களை X-ray ஆக பார்க்கும் ஒரு வல்லமையை இறைவன் எனக்கு கொடுத்திருக்கிறான். அவர்களும் நானும் பேசிக் கொள்கிறோம்.

- *நீங்கள் எழுதிய சிறுகதைகள் சிலவற்றை கூறுங்கள்.*

நான் பல சிறு கதைகளை எழுதினேன். சிறு கதைகள் மூலமாகவே எழுத்துலகத்திற்கு வந்தேன். வீரகேசரி, தினமணி, நிலா, ராதா போன்ற பத்திரிகை, சஞ்சிகைகளிலும் எனது சிறு கதைகள் வெளிவந்துள்ளன. அதில் அகில இலங்கை Y.M.M.A. அகில இலங்கை ரீதியாக நடத்திய 1400ம் ஆண்டின் திருக்குர்ஆன் பூர்த்தி விழாவை ஒட்டி நடாத்தப்பட்ட சிறு கதைப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றவன் நான்.

- *உங்கள் நாடகப்பிரதிகள் நூலாக வெளிவராமைக்கு என்ன காரணம்?*

('முள்' தவிர) சோம்பேறித்தனம் தான் காரணம். நூலாக என் நாடகங்கள் வெளிவர வேண்டும் என்ற முக்கியத்துவத்தினை அப்போது நான் உணர்ந்து கொள்ளவில்லை. 'முள்' எனும் நூல் கூட என் மாணவன் மேமன் கவி அவர்களின் நச்சுறுத்தலால் வந்தது. என் மேசைக்கடியில் நாடகங்களை அள்ளிக் கொண்டு போய் நூலாக்கித் தந்தார். அவருக்கு என் நன்றி. இப்போது நினைத்து கவலைப் படுகிறேன். பல நல்ல நாடகப் பிரதிகள் காற்றோடு சங்கமமாகி விட்டன. பல தமிழ்ப் பெரியவர்கள் எனது நாடகங்களை நூலுருவில் கொண்டு வர முயற்சித்தும் என் ஒத்துழைப்பு இன்மையால் அவை மௌனமாகி வாழ் விழந்து விட்டன.

- *இன்னும் வானொலி நாடகங்களை எழுதி வருகிறீர்களா? அவ்வாறெனில் அவற்றின் பெயர்களையும் அவை எவ்வானொலி சேவையில் ஒலிபரப்பாகிறது என்பதையும்குறிப்பிடுங்கள்?*

வானொலி நாடகங்களை வாழவைத்த வானொலி நிலையம் மௌனமாகிப் போன போது சூரியன் F.M. அதற்கு புத்துயிர் கொடுக்க முன் வந்திருப்பது நல்ல சகுனம். அதில் பல நல்ல விடயங்கள் இப்போது ஒலிபரப்பப்படுகின்றன.

- *உங்கள் நாடகம் தவிர்ந்த வேறு எல்லா எழுத்து முயற்சிகளையும் பற்றி குறிப்பிடுங்கள்.*

சிறு கதைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், சினிமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

(துஷ்யந்தி கதை-வசனம் எனது தமிழ்ப் பிரதியை சிங்களத்தில் மொழி மாற்றம் (பிரபல கவிஞர் பிரேம கீர்த்தி த அல்விஸ்) செய்து வெளிவந்து வெற்றிகரமாக ஓடியது. சின்னத்திரை "மினாரத்" எனும் நிகழ்க்கியின் மூலம் ரூபவாஹினியில் எச்.ஐ.எம். ஹுசைன் என்ற பிரபல தயாரிப்பாளரினால் எனது நாடகங்கள் ஒளிபரப்பாகின. பல மேடை நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டன. அதில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் "வீணைக் கொடி" அக்காலத்தில் பிரபலமாக பேசப்பட்டதுடன் தனிநாயக அடிகள், சிவத்தம்பி..... ஆகியோரராலும் பாராட்டப்பட்டது.

- *நீங்கள் பெற்ற கலைச்சுடர்,உண்டா விருதுகள் தவிர்ந்த ஏனைய விருதுகள் பற்றி கூறுங்கள்?*

கலாபூஷணம், அகில இலங்கை சமாதான நீதவான் என்பன சில.

- *வானொலி நாடகத்துறையில் உங்களை ஊக்குவித்தவர்கள் அல்லது அதை எழுத தூண்டுகோலாக இருந்தவர்கள் யார்?*

என் மைத்துணர் எம்.எச்.எம். ஆரிப் அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். என் தாய் என் மறைந்த மனைவி ஆகியோர் எனது நாடகங்களை கேட்டு கண்ணீர் விட்டு அழுததை என்னால் மறக்க முடியாது. மர்கூம் காமில் மரிக்கார், தயாரிப்பாளர் எம்.எம். குத்தூஸ், மர்ஹூம் எம்.எம்.இர்பான், குலாம் ரஷீத், ஆகியோர் மறக்க முடியாதவர்கள். காலம் சென்ற காரை நகரைச் சேர்ந்த திரு.வைரமுத்து அண்ணா அவர்களும் எனது நாடகங்களை உயிராக்கிய நடிக-நடிகையர் ஆதரவு தந்து இரசிகப் பெருமக்கள் என் உடன் பிறவாச் சகோதரன் பி.எச்.அப்துல் ஹமீத்.

- *நீங்கள் எழுதி தமிழ்ச் சேவையில் ஒலிபரப்பான நாடகங்கள் சுமார் எத்தனை இருக்கும்?*

தமிழ்ச் சேவையில் முஸ்லிம் சேவையில் எழுதிவிட்டாலும் பல சிறந்த நாடகங்கள் அங்கே ஒலிபரப்பப்பட்டன. 'சானா' அவர்களின் காலத்தில் பல நாடகங்கள் ஒலிபரப்பாகின. அதில் அகில இலங்கை சாஹித்திய மண்டலமும் இலங்கை வானொலியும் இணைந்து நடத்திய அகில இலங்கை வானொலி நாடகப் போட்டியில் 'இதயம் வாழ்த்தியது' என்ற எனது நாடகத்தினை 'சானா' ஷண்முக நாதன் என்னை ஊக்குவித்தவர்களில் முக்கியமானவர்கள். எனது தாய்- தந்தை சகோதர சகோதரிகளுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

- *நீங்கள் வானொலி நாடகத்துறையில் காலடி எடுத்து வைத்த சூழ்நிலை பற்றியும் அதைத் தூண்டிய காரணிகள் பற்றியும் கூறுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நான் பள்ளி மாணவனாக இருந்த போது 'தினகரன்' பத்திரிகை மாணவர் மன்றம் புதன் மலர் போன்ற பல பகுதிகள் இளம் கைகளை ஊக்குவிக்க வந்தன. அதன் மூலம் விலகிய பல எழுத்தாளர்கள் இன்று பலர் நம்மிடம் இருக்கிறார்கள். அப்படி அதில் எழுதிக் கொண்டிருந்த போது எழுத்தாளர் சியாஸ் இவ்வகையான எழுத்தாளர்களை ஊக்குவித்தார்.

கலைஞர் எம்.எச்.எம்.தாலிப் அடிக்கடி வானொலி நிலையம் போவார். ஒரு நாள் விளையாட்டாக ஒரு நாடகம் எழுதிக் கேட்டதன் விளைவு அஷ்ரப் கான் என்ற ஒரு கலைஞன் உருவாக காரணமானது.

- *பிறப்பு,படித்த பாடசாலை(ஆரம்பக்கல்வி, உயர் கல்வி) வளர்ந்த சூழ்நிலை பற்றி கூறுங்கள்.*

1941-02-04 பிறந்தேன். சிலாபம் றோசன் கத்தோலிக்க ஆரம்ப பாடசாலையில் பயின்று பின் மரியாவில் கல்லூரியில் படித்து பின்பு காலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி பெற்றேன். உயர் கல்விக்கு போகும் சூழ்நிலை சரியாக அமையாததால் மேற்படிப்புக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

- *உங்களுக்கு முன்னோடிகளாய் இருந்தவர்கள் யார்?*

என் உறவினரும் என் வளர்ச்சியில் மிக மிக அன்பும் கரிசனையும், உற்சாகமும் தந்த உறவினர் தமிழறிஞர் எஸ்.எம்.கமலுத்தீன் அவர்கள்.

- *உங்கள் எழுத்துத் துறைக்கு இடையூறுகள் ஏற்பட்டதுண்டா?*

என் எழுத்துக்களை ஆத்மார்த்தமாக அனைவரும் அங்கீகரித்தனர். ஆனால் அதனை யாரும் தடுத்து நிறுத்த முயலவில்லை. ஒரு இளம் செடி ஆரோக்கியமாக துளிர் விட்டு கிளைபரப்பப் போகிறது என்பதைக் கண்டு கொண்டதும் ஜாதி மத வித்தியாசமில்லாமல் அனைவரும் நீரூற்றி வளர்த்தனர்.

- *உங்கள் நாடகங்களுக்கு எவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன?*

எனது நாடகங்களுக்கு பல வித விமர்சனங்கள் எழுதப்பட்டன. சிலர் 'சினிமெடிக் டிராமா' அதாவது சினிமாவை அடியொட்டிய நாடகம் என்ற ஒரு பெயர் தந்தார்கள். அதில் இசை கலப்பது தவறானது என்றார்கள். அந்தந்த பிரதேச மொழிகள் பயன் படுத்தப்படல் வேண்டும் என்றார்கள். அதிகமான சோகம் இருப்பதாக சொன்னார்கள். நான் இவற்றை கண்டு கொள்ளவில்லை. என் மனதில் பட்டதை மக்களுக்கு எப்படிக் கொடுத்தால் இரசிப்பார்கள் என்ற நோக்கத்தில் அந்தந்த காலத்தில் ஏற்பட்ட தொழிநுட்ப மாற்றங்களுடன் இணைந்த கிடைத்த நல்ல வளங்களை வைத்துக் கொண்டு எந்த ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இலக்கிய வடிவமாக இருந்தாலும் அது மக்களிடம் போய்ச் சேர வேண்டும். மக்கள் அவற்றை அங்கீகரிக்க வேண்டும் என்ற நோக்கில் தான் நாடகங்களை எழுதினேன். பலர் வானொலி நாடகங்களுக்கு பல வரம்புகளை போட்டுக் கொண்டிருந்தாலும் நான் அவற்றில் அதிக அக்கறை காட்டிக் கொள்ளவில்லை. ஆரம்ப காலத்தில் எனது முதிர்ச்சியின்மை காரணமாக சில நாடகங்கள் எழுதப்பட்டன. கே.எம்.பாச்சா என்ற எழுத்தாளர் தயாரிப்பாளர் "நிதர்சனம்" என்ற ஒன்று உண்டு அதனை மையமாக்கி எழுதுங்கள் மக்களின் பிரச்சினைகளை கண்டு கொள்ளுங்கள் என்று அன்பு வேண்டுகோள் விடுத்தார் ஒரு பெரிய உண்மையை யதார்த்தினை சொல்லித்தந்தார். அதனை நான் மிகவும் பணிவுடன் ஏற்றுக்கொண்டேன். எனது நாடகங்கள் அதன்பிறகு புது வடிவம் கொண்டது.

எனது நாடகங்களில் பின்னணி இசை பயன்படுத்துவதை பற்றி பலருக்கு உடன்பாடு இல்லை. ஆனால் எனது நாடகத்தின் வெற்றிக்கு பின்னணி இசையும் ஒலியமைப்பும் மிகவும் முக்கியமான பங்கு வகித்துள்ளன. எனது நாடகத்தில் 05 பாத்திரங்கள் இருந்தால் பாத்திரமும் இசையும் என்று அதை நான் விமர்சனங்களுக்காக விட்டுவிடவில்லை. ஆனால் வெற்றி கிடைத்தது.



வானொலி நாடகங்களை
வாழவைத்த வானொலி நிலையம்
மௌனமாகிப் போன போது சூரியன்
F.M. அதற்கு புத்துயிர் கொடுக்க முன்
வந்திருப்பது நல்ல சகுனம். அதில்
பல நல்ல விடயங்கள் இப்போது
ஒலிபரப்பப்படுகின்றன.

- *உங்கள் குடும்பம் பற்றி கூறுங்கள். உங்கள் குடும்பத்தில் உங்கள் எழுத்து முயற்சிக்கு ஆதரவு கிடைத்ததா?*

நிறைய நிறையக் கிடைத்தது. என் குடும்பத்தில் ஆதரவு இல்லாதிருந்தால் நீங்கள் பேசும் இந்த மனிதன் காணாமல் போயிருப்பான். என் குழந்தைகள் காய்ச்சலினால் துடித்துக் கொண்டிருக்கும் போது அவர்கள் பக்கத்தில் அமர்ந்து கொண்டு நாடகம் எழுதுவேன். முக்கியமாக என் மனைவியின் ஒத்துழைப்பை நான் மறக்க முடியாது.

- *நீங்கள் எழுதிய நாடகங்கள் மற்றவர்களுக்கு எத்தகைய முன்மாதிரிகள் கிடைத்தனவென்று கூறுவீர்களா?*

தொடரும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கருவறையிலிருந்து

அநுராதபுரம் சமான்

நான் இன்னும்
அறிமுகமாகவில்லை
மௌனித்திருக்கும் நான்
அழுகுரலோடு
அறிமுகமாவேன்
உலகிற்கு!!

உலகின் மீது
சிலருக்கு பித்து
போலி நடிகர்கள்!
போலி முகங்களோடு
வேஷம் புனைந்து
சில நாட்டியங்கள்
அரங்கேற்ற....


முட்டி மோதி
முக்காடிட்டு அலையும்
முட்டாள்கள் சிலர்

வலக்காதால் கேட்டு
இடக்காதால் வெளிவிடும்
கேட்டும் கேட்கா
மனச் செவிடர்கள்!!

மன்னிக்க முடியா
குற்றவாளிகளின்
வலையில் சிக்குண்டு
வம்பளந்து நிற்கும்
வாலிபர்க் கூட்டம்

தர்க்கம் புரிந்து
தாண்டவமாடுவோரும்
தரணியில் விஞ்சி உள்ளனர்

இவை கேட்கும் கருவறை
இனி தாயே
எனக்கு
பிறப்பா இறப்பா தாயே..??





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பெரியவளானதும்

இக்கிரிகொல்லாவ லரீபா அபூபக்கர்

"அடியே நீலா உன் அப்பாக்கு ரொம்ப சீரியஸாமே.. நீ போய்ப் பார்க்கலியா? என்று அமிர்தா கேட்டாள். "போயும் போயும் அவரப்பாக்குரதுக்கு..... எனக்கு வேற வேல இல்லையா? அவர் எனக்குச் செஞ்ச துரோகத்துக்கு இப்ப அனுபவிக்கிறாரு. அதுதான் அவரோட ரெண்டாவது பொண்டாட்டி இருக்கிறாளே..அவ பாத்துக்குவா..." என்று வெறுப்பாக கூறினாள் நீலா.

ஆம்!. இவளின் சிறுவயதிலே தன் தாயைத் தவற விட்டு விட்டாள். இவள் சிறியவள் என்றும், இவளைப் பார்த்துக் கொள்ள ஒருத்தி தாயாக வர வேண்டும் என்றும் யோசித்த அப்பா, சோமசுந்தரம் இரண்டாவதாகத் திருமணம் செய்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தமாதிரி அவள் நீலாவை அன்பாகக் கவனிக்கவில்லை. மாறாக அடியும், உதையும், திட்டுக்களும் தான் கிடைத்தன. இத்தனை விடயங்கள் நடந்தாலும் சோமசுந்தரம் எதுவும் பேசுவதில்லை. ஏனென்றால் அவளை எதிர்த்தாலோ அல்லது அதிகம் பேசினாலோ நீலாவிற்கான கொடுமைகள் இன்னும் அதிகரிக்கும். என்ற உண்மையை ஏற்கனவே உணர்ந்திருந்தார். இப்படியே காலங்கள் கடந்து நீலாவிற்கு 21 வயதும் ஆகிவிட்டது.

தனது துயரங்களை மறக்கடிக்க அருண் என்ற வாலிபனைக் காதலித்து ஓடிப்போய்த் திருமணமும் செய்து கொண்டாள். அப்படி வந்தவள் அமிர்தாவின் வீட்டின் அருகில் குடி இருக்கிறாள். இப்பொழுது நீலாவிற்கு 6 வயதில் ஒரு குழந்தையும் கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நீலாவின் குழந்தையுடன் சேர்ந்து படிப்பதற்கும், விளையாடுவதற்கும் பக்கத்து வீட்டிலிருந்து ஒரு குழந்தை வருவது வழக்கம். "ஆண்டி, எனக்கொரு ஆச.. அதை நெறவேத்தி வப்பீங்களா?" என்று கேட்டது வழமை போல் விளையாட வரும் அக்குழந்தை.

"அப்பிடி என்னம்மா கேக்கப்போற? தைரியமாய்க் கேள்" என்றாள் நீலா. "என் அம்மா செத்துப் போயிட்டாங்க. அதால என் அப்பா சித்தீன்னு ஒருத்திய கூட்டிட்டு வந்திருக்காரு. அவங்க எப்பவும் எனக்கு திட்டுறதும், அடிக்கிறதையுமே வேலையா வச்சிருக்காங்க. என்னால படிக்கவே முடியுறதில்ல. அதால உங்க வீட்டுக்கு நான் வர்ர நேரத்துலயாவது நிறைய படிச்சுத் தாங்க. நான் பெரியவளானதும் நல்லாப் படிச்சி, வேலைக்குப் போய் என் அப்பாவப் பாத்துக்குவேன். அப்ப என் சித்தியால என்னையும் என் அப்பாவையும் ஒண்ணும் செய்ய ஏலாது தானே..?" என்று ஆறுதலாகவும் அமைதியாகவும் கூறி முடித்தது குழந்தை.

இவற்றை எல்லாம் கேட்டதும் நீலா அதிர்ந்து போனதுடன் தன் நிலையை எண்ணி வெட்கித் தலை குனிந்தாள்.

## மணிக்கவிதைகள்

என் இதழ்களின்
உஷ்ண
உரசல்கள்!
**கோபம்**

அவன்
விழிக்கதவுகளை
மூடிக்கொண்டான்..
மேற்கில் சென்று!
**அஸ்தமனம்**

இலக்கணப் பூச்சிகள்
மேயாத
புதிய பாக்கள்!
**புதுக்கவிதை**

அவைகள்
தரிசனம் தரவில்லை
எங்கள் வாகனங்கள்
'ஸ்ரைக்' செய்தன..!
**எரிபொருள்**

அந்த வாலிபன்
விழித்திருந்து
பட்டியல் போடுகிறான்
சீதனம் வாங்க !
**விழிப்பு**

எம்.டி.எம்.யூனுஸ்
காத்தான்குடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈரானிய சமூக விழுமியங்களை வெளிப்படுத்தும் சினிமாக்கள்




ஈரானிய சமூகம் குறித்தும் அரசியல் குறித்துமான மிக ஆழமான விமர்சனங்களை இத் திரைப்படங்கள் முன் வைக்கின்றன.

-எம்.சீ.நஜ்முதீன்-
அழுத்கம.

ஒரு நாட்டின் கலைக் கலாசாரத்திற்கும், விழுமியங்களுக்கும் இடையிலான பரஸ்பரத்தை சினிமா குறியீடாகக் கொண்டு அமைந்திருக்கும். இவ்வாறு ஈரானிய சினிமாக்களும் அந்நாட்டின் கலைக் கலாசார விழுமியகங்களை விமர்சன ரீதியாக அணுகி, யதார்த்த வாதத்தை உருவகக் காட்சியினூடாக நிறுவி வருகின்றன. மேற்படி அடையாளங்களை சுட்டும் திரைப்படங்கள் கடந்த மார்ச் மாதம் கொழும்பு BMICH சினிமா மண்டபத்தில் திரையிடப்பட்டன.

ஈரானிய புரட்சியின் (இஸ்லாமியப் புரட்சி) 27வது ஆண்டினை முன்னிட்டு இலங்கைக்கான ஈரானிய தூதுவராலயம் ஆசிய சினிமா மையத்துடன் இணைந்து மேற்படி ஈரானிய சினிமாப் படங்களை கொழும்பில் திரையிட்டது.

சர்வதேச சினிமாவில் ஈரானிய சினிமாக்கள் தனித்துவமான அம்சங்களுடன் மிளிருகின்றன. நடைமுறை வாழ்விலுள்ள யதார்த்தமான பிரச்சினைகள், தனிமனித ஆளுமைகள், அரசியல் நிதர்சனங்கள் போன்ற வற்றினைக் கலைத்துவமாக தருவதில் ஈரானிய சினிமாக்கள் முன்னிற்கின்றன. அமெரிக்கா, பிரித்தானிய, பிரான்ஸ், ஜப்பான், சீனா, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுடனான சினிமாக்களோடு ஒப்பிடும் போது ஈரானிய சினிமாக்கள் வேறுபட்ட கோணத்தில் அணுகப்பட வேண்டியவை. குறிப்பாக நவீனத்துவத்தினையும் அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உவப்பான நாகரீகத்தையும் பின்னணியாகக் கொண்டு சமூகத்தில் விளையும் நேர்-மறை நிகழ்வுகளினைத் துல்லியமாக அணுகும் தரமான திரைப்படங்களாக இவைகள் ஜொலிக்கின்றன.

கொழும்பில் நடந்த ஈரானிய திரைப்பட வாரத்தில் மேற்படி அம்சங்களை அடிக்கோடிடும் விதமான ஆறு திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

அவை ஒவ்வொன்றையும் சுருக்கமாக நோக்குவோம். (இத்திரைப்படங்கள் பற்றிய குறிப்புகளுக்கு திரைப்பட மண்டபத்தில் வழங்கப்பட்ட துண்டுப்பிரசுரம் உசாத்துணையாக அமைந்தது.)

**Lineless Paper**

இத்திரைப்படமானது பெண்ணியம் சார்ந்த ஒரு கருவாகும். சமூகக் தளத்தில் அடக்கியொடுக்கப்படும் பெண்களுக்கு உத்வேகமூட்டுவதாய் இத்திரைப்படம் அமைந்திருந்தது. நிஜ வாழ்க்கையில் மன உறவு தொடர்பான பிரச்சினைகளில் சிக்கித்தவிக்கும் ஒரு பெண் அச்சவால்களையெல்லாம் முறியடித்து வெற்றிகரமான திரைக்கதை எழுத்தாளராக மிளிர வேண்டும் எனக் கனவு காண்கிறார். இத்திரைப்படத்தின் இயக்குநர் 'நாசர் தக்வி' கருவூலம் கொண்ட திரைக்கதை வசனங்களாலும் வனப்பான காட்சிகளினூடாகவும் இத்திரைப்படத்திற்கு உயிர் ஊட்டியுள்ளார்.

**Children of Heaven**

இத்திரைப்படமானது கனிவுத் தனத்தை துல்லியமாக துலக்கும் ஒரு கருவாகும். இது ஈரானின் நிதர்சன வாழ்வுப் பின்னணிகளை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. அருமையான பாத்திர வார்ப்புகளுடன் ஈரானிய சமூகம் குறித்து; அரசியல் மற்றும் சமூக விவகாரங்கள் அலசப்படுவதோடு ஈரானிய சமூகம் சார்ந்த ஆழமான விமர்சனம் முன் வைக்கப்படுகின்றன.

ஏழைக் குடும்ப சிறுவன் ஒருவன் தமது பாதணிகளைத் தொலைத்து அதனால் தான் கடுமையாக பாதிக்கப்படுவதோடு அவ் விடயங்களைத் தமது பெற்றோரிடம் தெரிவிப்பதற்கு அச்சப்பட்டு அதனை மூடி மறைப்பதற்கு முயற்சி செய்கிறான்.

**Baren**

இத்திரைப்படமானது மந்தமாகவே தெளிவினைத் தரக் கூடிய போக்கில் அமையப் பெற்றிருக்கிறது. கட்டடங்களை நிர்மாணிக்கும் நிருவனம் ஒன்றில் ஈரானின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வந்த தொழிலாளர்களும் போரின் கொடூரத்தால் ஆப்கானிலிருந்து வந்த அகதிகளும் தொழில் புரிகின்றனர். அவர்களிடம் தங்களை அடையாளப்படுத்தும் அடையாள அட்டை இல்லா திருப்பதனால் சட்ட விரோதமான முறையில் குறைந்த சம்பளத்தில் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். அங்கு 17 வயது இளைஞரான லதீபும் வேலை செய்கிறான். அங்குள்ள தொழிலாளர்களுடன் லதீப் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்கிறான்.

ஆப்கான் தொழிலாளியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நஜாப் கட்டடத்திலிருந்து வீழ்ந்து தனது காலை முறித்துக் கொள்கிறார். அவரின் வெற்றிடத்திற்கு நஜாபின் 14 வயது மகன் ரஹ்மத் அமர்த்தப்படுகிறான். ரஹ்மத்தால் கடின வேலை செய்ய முடியாததை உணர்ந்த தொழில் பரிசோதகர் லதீபுக்கும் ரஹ்மத்துக்கும் இடையில் வேலையை மாற்றிக் கொடுக்கத் தீர்மானிக்கிறார்.

இதனால் ஆத்திரமடைந்த லதீப், ரஹ்மத்தின் வேலைக்கு இடையூறு விளைவித்ததுடன் ரஹ்மத்தை இரகசியமான முறையில் வேவு பார்க்கிறான். அந்த சந்தர்ப்பத்தில் அவன் ஒரு பெண் என தெரிய வருகிறது.

இதன் பின்னரான திரைப்படக் கதை இந்திய சினிமாக் கதையை தழுவி நகர்கிறது. லதீப் ரஹ்மத்தின் மேல் காட்டுகிற பரிவு காதலாக மாறுகிறது. இத்தொடர்பு தொழில் பரிசோதகரிடம் மாட்டிக் கொள்கிறது.

லதீப் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்படுகிறான். அந்நிறுவனத்தின் சட்ட விரோதச் செயல்கள் வெளிக்காட்டப்பட்டு சட்டத்திற்கு இணங்கி ஒழுக வேண்டிய நிலை ஏற்படுவதோடு தொழில் வழங்குநர் அபராத தொகையும் செலுத்த வேண்டியுள்ளது.

## The Saint Mary

இறைவனின் அடிமை என்ற கருத்தைக் கொண்ட, மேரி என்ற குழந்தை ஆறாவது வயதிலேயே தேவாலயத்திற்கு அனுப்பப்பட்டு இறைவணக்கத்திலும் உழைப்பிலும் கழித்து இறைவனின் அருள் கிடைக்கப்பெற்று யேசு நாதரை ஈன்றெடுக்கிறார். என்ற மத அனுஷ்டானத்தை இத்திரைப்படம் சுட்டி நிற்கின்றது.

## The Girl in the Sneakers

இத்திரைப்படமானது காதலர்களின் மன உழைச்சலையும் அவர்களின் எதிர்ப்பார்ப்பையும் கனவான இலட்சியப் போக்கினையும் வேண்டி நிற்கும் திரைப்படமாகும்.

அய்தீன்- ததாய் ஆகியோரின் காதல் கதையிது. இளம் பெண்ணான ததாய் பெற்றோருக்கும் இஸ்லாமியக் கலாச்சாரத்திற்கும் எதிராக செயற்படுவதோடு இளமைப் பருவத்தின் நிழற் கனவுகளை நிதர்சனமாக்குவதற்காக துடிப்பவள். இதன் நிமித்தம் அய்தீன்-ததாயின் கன்னித் தன்மையை கலைத்த குற்றச் சாட்டின் பேரில் பொலிஸ்ரால் கைது செய்யப்படுகிறான். 'ரஸூல் ஸத்ர் அமேலி' இயக்கிய இத்திரைப்படம் வளரிளம் பருவத்தினரின் முட்டாள் தனத்தை நன்றாக பட்டை தீட்டிக் காட்டுகிறது.

## Taste of cherry

நடுத்தர வயது நபர் ஒருவர் தற்கொலை செய்வதற்கான திட்டமிடுதலை சித்தரிப்பதாய் இத்தரைப்படம் அமைந்துள்ளது. ஏற்கனவே தனக்கான புதைகுழியைத் தோண்டியுள்ள அவர் தன் உயிரை மாய்த்து சடங்குகளை நிறைவேற்றுவதற்கு ஒரு சிப்பாயிடமும், மதகுரு ஒருவரிடமும் உதவி கேட்கிறார். அவர்கள் அதனை மறுதலிக்க, ஏற்கனவே தற்கொலை செய்வதற்கு முயற்சித்த ஒருவரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதவி கேட்கிறார். அவர்கள் அதனை மறுதலிக்க, ஏற்கனவே தற்கொலை செய்வதற்கு முயற்சித்த ஒருவரிடம் உதவி கேட்டு அவரை இணங்கச் செய்கிறார்.

இன்றைய சினிமாத்த ளத்தில் ஆரோக் கியமான திரைப்படங்களை பார்ப்பதானது மிக அரிதான காரியமாகும். மலிந்து கிடக்கும் திரைப்படங்கள் மாறுதலான வார்ப்புகளை ஊட்டுவதாய் நிகழ்வதில்லை. ஒரு திரைப்படத்தின் ஆரம்பப் பகுதியை பார்த்தாலே அதன் இறுதி வரை தீர்மானிக்கக் கூடிய வகையில் ஒரே தரமுடைய திரைப்படங்களாகத் தான் காணப்படுகின்றன. இந்திய திரைப்படங்கள் (தமிழகம்) மேற்சுட்டிய வசனத்தின் அடிநாதமாகவு மிளிர்கின்றன.

இதற்குப் புறம்பாக ஈரானியத் திரைப்படங்கள் விதம் விதமான கருத்தாழம் கொண்டமைந்ததாகும். இத் திரைப் படங்களின் காட்சியமைப்புகளும் தனித்து வமிக்கவையாகும். இவ்வாறிருந்தும் கிசு-கிசுப்பு நிறைந்த இந்திய சினித் துளிகளை உடனுக்குடன் வழங்கும் எமதூடகங்கள் இனிதான இரசனை பரவிக் காணப்படும் ஈரானிய சினிமா தொடர்பான கருத்துப் பரிமாறலை வழங்க பின்னிற்கின்றன.

எனினும் எம்.ஐ.ஜாபிர் தொகுத்து வழங்கும் பிரவாகம் நிகழ்ச்சி, 'வீரகேசரி' பத்திரிகையின் "நிறப்பிரிகை" பகுதி ஈரானிய திரைப்படங்கள் பக்கம் தம் பார்வையைத் திருப்பியுள்ளன.

பலரும் எதிர்ப்பார்க்காத விதமாக 10ம் இதழ் சற்று காலதாமதமாகவே வெளிவந்தது. சடுதியாக கணிணி ஒத்துழைக்காமை காரணமாக உரிய காலத்துள் இதழை கொண்டு வர முடியாமற் போயிற்று என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

–ஆசிரியர்

**அல் – மதீனா**

மாணவ மன்ற கலை இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்
எப்.ஆர்.பரீட்ஹ்
அல் மதீனா
குடாநெழுபாவ,
ஹிதோகம.

புதிய ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கோவணங்கள் கோவுகட்டி
கொட்டில்களை ஆட்சி செய்ய
அரிதான சிரிப்பை சிலர்
அன்னமென பங்கு போட

கவிழ்ந்திருந்த சோற்றுப் பானை- தன்
மீது
வீழ்ந்திருந்த தூசியினை
அள்ளிக் கொண்டு வந்து வீசியது
என்
கண்களில் காற்று!

ஆயிரம் ஆயிரம் இராக்கவிகள்
பாடப்பட்டன
அன்றோ எக்கவியுமில்லை
எங்குமே நிறைந்திருந்தது
எளிமைக் கோலம் பூண்ட நிசப்தம்

இனம் தெரியா சில
ஈனர்களின் துப்பாக்கி ரவைகள்
இரக்க சிந்தையற்று
எச்சமிட்டு நிறைக்கின்றன

அடுப்புகளை காணவில்லையென
தடுப்புக் காவலற்ற ஆயிரம் பூனைகள்
ஆர்ப்பாட்டம் நடத்தின அந்த
ஓர் வரண்ட தெருவில்..

வளங்கொளித்து வசந்தங்கள் பாடிய
வண்ணப் பூஞ்சோலைகள் - இன்று
பயங்கரவாதிகளின் பாசறைகளம்மா..

பாதையில் நடக்க முடியாது

பல உயிர்களை கௌவும்
ஊமைக் குண்டுகளின் பிரசவத்தால்
கால் பதிக்கக் கூட வழியில்லை
அந்தப் பாதையில்

கண்ணி கண்டுபிடிக்கப்பட்ட
மனித உயிரைக் கைப்பற்றும்
இயந்திரத் துப்பாக்கிகள்
நித்தம் பொழிகின்றன
குண்டு மழை!

பிடிப்பதற்கு இருப்பதோ
குண்டு துளைக்கும் குடைகள்-
இனித்தேவை
குண்டு துளைக்கா
இரும்புக் குடைகள்!



# ஓர் வரண்ட தெருவில்...

அஸ்மீர் கான்
எஸ். ஹமீட்
பமுனுகம
முறியாகடவள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






**யு. மாஜிதா**
**இக்கிரிகொல்லாவ.**

"கொக்கரக்கோ..." என்ற சேவலின் அழைப்போசை கேட்டு தூக்கத்திலிருந்து விழித்தாள் அகல்யா. "இன்று என்ன கிழமை? ம்..ம்... திங்கட்கிழமை.." என்று நினைவு வந்தவுடன் வேகமாக எழுந்து ஆடைகளை சீர் செய்து கொண்டு கூந்தலை தூக்கி கொண்டை போட்டவளாய் சமயலறைக்குள் நுழைந்தாள்.

அடுப்புப் பற்ற வைத்தது முதல் சமைத்து, தம்பி தங்கைகளுக்கும் உணவைப் பொதி செய்து பொட்டலங்களை அவரவர் புத்தகப் பைகளில் வைத்தாள்..இயந்திர கதியில் இயங்கிய அவள், சுவர்க் கடிகாரத்தை நோக்கினாள். நேரம் 7.25 எனக் காட்டியது. "அடக் கடவுளே! இதற்கிடையில் இவ்வளவு நேரமாகிட்டுதே.." என்று எண்ணியவளாக அவசர அவசரமாக உடைகள் மாற்றி, நடையிலே தேனீர் பருகியவள், "நான் போய்ட்டு வரேம்மா" என்று கூறியபோது மணி எட்டைத் தாண்டியிருந்தது.

மகளின் குரலோசை கேட்ட மரகதம் உள்ளே இருந்து "இன்று சீக்கிரம் வீட்டிற்கு வந்திரு. தரகர் மாப்பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வாரதாச் சொன்னார்." என்று கட்டளை பிறப்பித்தாள். "சரி..சரி" என்று புறப்பட்டாள் அகல்யா.

வேகமாக பஸ் தரிப்பிடத்தை அடைந்தாலும் அதைவிட பல மடங்கு அதிகமாகவே அடித்துக் கொண்டது மனம். காரணம் இன்று வரும் வரனாவது சரியாக அமைந்து விடுமா? என்ற வேதனையே...

வீட்டில் மூத்தவளாகப் பிறந்தாலும் நோயாளியாகிவிட்ட அப்பாவுக்காகத் தன் கனவுகள், கற்பனைகள் எல்லாவற்றையும் மூட்டை கட்டி வைத்து விட்டு குடும்பத்திற்காகவே மாடாய் உழைத்து தேய்ந்து போனவள் அவள்! அடுக்கடுக்காகத் தனக்குப் பின் இருந்த தம்பி தங்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தம்பியையும் படிக்க வைப்பதற்காகவே தனியார் வங்கியொன்றில் ஆளணி உதவியாளராகத் தனது 19ம் வயதில் சேர்ந்தாள்.

மூத்த தங்கை அனிதா நல்ல கெட்டிக்காரி. அவளைப் படிக்க வைத்து வைத்தியராக்க வேண்டும் எனும் தந்தையின் கனவை நனவாக்க அயராது உழைத்தாள் அகல்யா. உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் பயின்று கொண்டிருந்த அனிதாவின் கல்வியைப் பற்றியே கனவு கண்டு கொண்டிருந்தது அவள் குடும்பம்.

அவ்வேளை தரகர் ஆறுமுகம், "அண்ணே.." என்று அழைத்தவாரே உள்ளே நுழைந்தார். "வா ஆறுமுகம். என்ன விஷயம்..இந்தப் பக்கம் வந்திருக்கிறாய்?" என்றவாறே எழுந்திருக்க முயன்ற கார்த்திகேசுவை பிடித்து சாய்த்து இருக்க செய்த ஆறுமுகம் தொடர்ந்தார்.

"நம்ம பிள்ளை அகல்யாக்கு நல்ல வரன் அமைஞ்சிருக்கு அண்ணே.." என்று தொடர்ந்த அவர் "சீதனமில்லாத வரன் யாருக்கு இலேசில் அமையும்?" என்று திருமணப் பேச்சை தொடக்கி வைத்தார். ஊரே மூக்கில் விரல் வைக்க அகல்யாவின் திருமண வேலைகள் தடல் புடலாக நடந்து கொண்டிருந்தன.

திருமண மண்டபத்தில் அமர்க்களமாக அனைவரும் இருக்கும் போது திடீரென சின்னவள் அமுதா ஓடி வந்து ஏதோ கூற, அறையினுள் எட்டிப் பார்த்த தாய் மரகதம் சிலையானாள். அடுத்த தங்கைகள் இருவரினதும் கண்கள் ஆறாக காட்சியளித்தன. அகல்யா அவர்களின் கையில் இருந்த கடிதத்தை எடுத்துப் பார்த்தாள்.

"அன்பின் அம்மா, அப்பாவிற்கு,

அனிதா எழுதிக் கொள்வது நான் எனது பாடசாலையில் சுரேஷ் எனும் ஒருவரை மனதார விரும்புகிறேன்.. அவரோடு செல்கிறேன் அவரையே திருமணம் செய்து கொள்வேன். என்னைத் தேட வேண்டாம்.

இப்படிக்கு அனிதா.

வாசித்து முடித்த அகல்யா தனது குடும்பத்தினரைப் பார்த்தாள். குடும்பமே பாதாளத்தில் விழுந்ததைப் போல் நிற்பதை உணர்ந்து செய்வதறியாது திகைத்து நின்றாள்.

செய்தி வேகமாக பரவி, இறுதியில் அவளது திருமணமும் தடைப்பட்டது. அது மட்டுமா? "மானங் கெட்ட கழுதைகள்.உசிரை வச்சுக் கொண்டு இருக்குதுகளே.. இதுகள் எல்லாம் வாழ்ந்து என்னத்தச் செய்யப் போகுதுகளோ..." இவ்வாறு வசைமாரிகளுடன் வந்தோர் விடை பெற்றனர்.

மூத்தவளின் திருமணம் தடைப்பட்டது; அனிதாவின் ஆணவச் செயல், இரண்டும் தந்தையின் உயிரைக் காவு கொள்ள அகல்யாவின் தலையில் குடும்பச் சுமை குடி கொண்டது. மணவறை வரைச் சென்று நின்று விட்ட சோகத்தை கூட வெளிக்காட்ட முடியாதளவுக்கு சுமை தாங்கி யானாள் அவள்.

தனது உடன் பிறந்தோரின் நலனுக்காக உழைக்கத் தொடங்கினாள். காலம் வேகமாக நகர்ந்தோடியது. அடுத்த இரு தங்கைகளையும் நன்றாகப் படிக்க வைத்து தொழில் பெற்றுக் கொடுத்து திருமணமும் செய்து வைத்து விட்டாள். இதற்கிடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எத்தனையோ வரன்கள் வந்தன. பெண் பார்க்கும் சம்பிரதாயம் நடைபெறும். இவளுக்கு வயது 36ஐத் தாண்டி விட்டதனால் சீதனம் அதிகமாகக் கேட்பார்கள். இயலாத தாயார் மகளை ஏக்கத்தோடு பார்ப்பார். "சும்மா விடும்மா இது இல்லாட்டி இன்னொன்று வராமலா போகும்?" என்று தாயைத் தேற்றி சமாதானப் படுத்துவதோடு அவள் திருமணப் பேச்சு முடிவு பெறும். இவை அவளது வாழ்க்கையில் வழமையான நிகழ்வுகளாகிவிட்ட இந்நிலையில் தான் தாயார் காலையில் இவ்வாறு கூறினாள்.

அலுவலகத்தில் வேலைகள் சரியாக செய்ய முடியாதவாறு அவளது சோகம் குடைந்து எடுத்தது. ஒருவாரு சுதாகரித்துக் கொண்டு வீடு வந்த அவள் தாய் மனம் நோகக் கூடாது என்பதற்காக தன்னை அமைதியாக அலங்கரித்துக் கொண்டாள்.

வழமை போல மாப்பிள்ளை வீட்டார் வந்தனர். பெண் பார்க்கும் படலம் ஆரம்பமானது. கோப்பித் தட்டுடன் மாப்பிள்ளை வீட்டார் முன் சென்ற அகல்யா அனைவருக்கும் கோப்பி பரிமாறி வணக்கம் கூறிக் கொண்டாள்.

மாப்பிள்ளைக்கும் அவளை பிடித்திருந்தது. இறுதியில் வரதட்சணை பேச்சு. "உங்க பொண்ணுக்கும் 36 வயசுக்கு மேல ஆகிட்டதால கொஞ்சம் பாத்து செஞ்சீங்கண்டா நல்லது. 20 பவுண்; பணம் 5 இலட்சம்; மாப்பிள்ளைக்கு பைக் மோதிரம்..." என்று அடுக்கிக் கொண்டு போனார் மாப்பிள்ளையின் தாயார்.

இவற்றை எல்லாம் மறைவில் நின்று கேட்டுக் கொண்டிருந்தாள் அகல்யா. "என்ன மரகதம்மா ..சரிதானா?" என்று மாப்பிள்ளை வீட்டார் கேட்க, "முயற்சிப் பண்ணிப் பாக்கிறேங்க." என்று விக்கிக் கொண்டே கூறினாள் மரகதம். மாப்பிள்ளை வீட்டார் விடை பெற்றனர்.

முன் கதவை தாழிட்டுக் கொண்டு உள்ளே வந்த தாயை பரிதாபமாகப் பார்த்தாள் அகல்யா. "இது என்னம்மா உன் தலையெழுத்து? இந்த வரனும் சரிவராது போல இருக்கே... வரதட்சணை நிறைய கேக்க றாங்களே" என்றாள் தாய். வழமை போன்றே "சும்மா விடும்மா இன்னொன்று அமையாமலா போகும்?" என்று வரட்சியாகப் புன்னகைத்தாள் அகல்யா..



வெளிவந்து விட்டது

நாச்சியாதீவு பர்வீனின்
சிரட்டையும் மண்ணும்
கவிதை நூல்

ப்ரிஸ்ம்
87/24 தர்மபால
மாவத்தை
அநுராதபுரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பேசியவர்கள் பேச

அவர்கள்
பேசினார்கள்
இவர்களும்
பேசினார்கள்

எம்மை
நசுக்குவதென்றால்
நிலவுக்குச்
சென்றாங் கூட
பேசுவார்கள் அவர்கள்!.

இவர்கள்
இருந்தவர்கள்
மௌனியாயிருக்க
பிரிந்தவர்கள்
பேசினார்கள்
அமைச்சுக்கள் இத்தனை
பிரதி அமைச்சுக்கள் எத்தனை
இணைவதற்கு!.

ஆனால்
எம்மிடமோ
இருப்பவைகள்
ஒன்றுமில்லை
இழந்தவைகள் தானே
அதிகம் வீணாய்.

பேசியவர்கள்
பேச
நாமும்
ஆயுதமேந்திய
தீவிரவாதிகளானோம்

நாச்சியாதீவு
எம்.சஹ்ரீன் அஹ்மட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சமகாலப் படைப்புலகில் அமைப்பியல்வாதத்தின்

## போக்கும் நோக்கும்

எம்.சி.றஸ்மின்
பேராதனைப் பல்கலைக்கழகம்

தமிழில் புதிய திறனாய்வுப் போக்குகள் தோன்றுவது தோன்றி வழக்கிழந்து போவது அல்லது மீண்டும் அவை தோன்றுவது ஒன்றும் புதிய விடயமல்ல. யதார்த்தவாதம், அழகியல் உணர்ச்சிவாதம் மாக்சிசவாதம் என பல்வேறு கோட்பாடுகளைக் கேள்விக் குறியாக்கியது அல்லது மேற்குறிப்பிட்ட கோட்பாடுகளின் சில அம்சங்களையாவது கேள்விக் குறியாக்கியது அமைப்பியல்வாதம். அமைப்பியல் வாதமும் அது ஏற்படுத்திய தாக்கமும் என்ற தளத்திலிருந்து நோக்கும் போது அமைப்பியல்வாதம் குறிப்பிடும் படியான சாதனைகளைச் செய்யாவிட்டாலும் குறிப்பிட்டுச் சொல்லும் படியான செல்வாக்கினைத் திறனாய்வு உலகிற்கு செலுத்தியுள்ளது.

ஜே.ஜே சில குறிப்புகள் (சுந்தரராமசாமி) நாளை மற்றொரு நாளே (ஜீ நாகராஜன்) ஆகிய இரண்டு நாவல்கள் தொடர்பான திறனாய்வுகளின் மூலம் அமைப்பியல் தொடர்பாக முதன் முதலில் தமிழில் பேசப்பட்டது. கவிதை பற்றிய திறனாய்வில் அமைப்பில் அதிக அக்கறையுடன் செயற்பட்டது. இலக்கியத்தினுள் ஒரு பன்முகக் குரலினை கண்டறியும் பணியில் இது ஈடுபட்டது. இங்கு இலக்கிய கர்த்தா ஒரு அதிகாரியாக, ஒரு சூத்திரதாரியாக, ஒரு கிராமத்தின் கதை சொல்பவராக, ஒரு ஆதிவாசியாக இருக்க முடிவதை அமைப்பியல் தெளிவுபடுத்துகிறது.

மொழி என்ற கருத்தாக்கத்தையே அமைப்பியல் முதன்மைப்படுத்த விளைகின்றது. மொழியால் அரணிடப்பட்ட விதத்திலே மனித சமூகம் இருக்கின்றது. அல்லது மனித சமூகத்தின் இருப்பில் மொழியே பிரதான பங்கு வகிக்கின்றது. ஆக, மொழிக்குள் நாம் இருக்கின்றோம் என்பதிலிருந்து தனது ஆய்வை ஆரம்பிக்கும் அமைப்பியல் நமக்குள் பெருமதிப்புப் பெற்றிருந்த கலாச்சாரம், வரலாறு, உள்ளிட்ட பல அம்சங்களை உடைத்தெறிகின்றது.

இதன் மூலம் நமக்குள் ஒருமைகளாக நாம் கட்டமைத்துக் கொண்ட பல விடயங்களை அமைப்பியல்வாதம் பிளவு படுத்திக் காட்டுகின்றது. நமக்குள் 'நான்' எனும் ஒன்றை விட பல நான்கள் முரண்பட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செயற்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அறிவு, பண்பாடு, ஜனநாயகம், என்றெல்லாம் நம்மளவில் நாம் கொண்டிருக்கும் கருத்தாக்கங்களை புறத்தில் செயற்படும் ஏதோ ஒரு சக்தி எவ்வாறு கட்டமைக்கிறது என்பதை அமைப்பியல் தெளிவாக முற்படுகின்றது.

தமிழ் இலக்கிய திறனாய்வில் விஞ்ஞானப் பாங்கில் அதிக நாட்டங்கொண்டவர்களும் தமிழ் இலக்கியம் தமிழ் வரலாறு, தமிழர் பண்பாடு என்பன தொடர்பாக பெருமிதமான கருத்துப் போக்கினைக் கொண்டிருந்தனர். இலக்கியத்தினூடாக ஆதிக்கத்தையோ, அதிகாரத்தையோ வெளிப்படுத்த முற்பட்டனர். (இவர்கள் வேறு தரப்பினர்) இவற்றை அமைப்பியல்வாதிகள் தகர்க்க முனைந்தனர்.

இலக்கியத்தில் சிலர் புனிதத்தை தரிசிக்க முற்படுகின்றனர். அமைப்பியலோ அப்படி இலக்கியத்திற்கு ஒரு தனி முகம் கிடையாது என்கிறது. பண்பாடு என்பதும் புனிதமான ஒன்றன்று. அதுவும் குறிப்பிட்ட சிலரால் சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட புனைவு என்கின்றது. இவ்வமைப்பியல் நெறி தலித்தியத்தியத்திற்கும் பெண்ணியத்திற்கும் மாற்றுக் கலாசாரம், எதிர்கலாசாரம், எதிர் அழகியல் என்பனவற்றை முன்வைப்பதிலிருந்து இதனை அறிந்து கொள்ளலாம்.

இவ்விதத்தில் அமைப்பியல்வாதம் ஏற்படுத்திய தாக்கத்தினை ஆராயும் பொருட்டு அமைப்பியல்வாதம் என்றால் என்ன அமைப்பியல்வாதம் தோற்றம் பெறுவதற்கான பின்புலத்தில் பாதிப்புச் செலுத்தியவர்கள் யார் என்பன பற்றி இங்கு கருத்திற் கொள்ளப்படுகின்றது. இறுதியாக அமைப்பியல்வாதம் எத்தகைய உள்ளீடுகளைக் கொண்டிருக்கின்றது அவ்வுள்ளீடுகள் சமகால திறனாய்வுப் போக்குகளில் எத்தகைய பாதிப்புகளை செலுத்துகின்றன என்பன தொடர்பாக நோக்கப்படுகின்றது.

இலக்கியத்தில் சிலர் புனிதத்தை தரிசிக்க முற்படுகின்றனர். அமைப்பியலோ அப்படி இலக்கியத்திற்கு ஒரு தனி முகம் கிடையாது என்கிறது.

தமிழவன், அ.மனவாளன், நாணி, அ.மாக்ஸ், முத்து மோகன், ராஜ் கௌதமன் உள்ளிட்டவர்களின் நூல்கள் சான்றுகளாக கொள்ளப்படுகின்றன. "மொழி என்னும் அம்சத்தினை அடிப்படையாக கொண்டும், பிரதி, வாசகன் உள்ளிட்ட அம்சங்களை அடிப்படையாக கொண்டும் அமைப்பியல் எத்தகைய வித்தியாசமான போக்குகளை கடைப்பிடிக்க விரும்புகின்றது என்பது ஓரளவு கருத்திற் கொள்ளப்படுகின்றது.

இலகு கருதி தலைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இரண்டு பிரதான பகுதிகளாக நோக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதியில் அமைப்பியல் தோற்றம் பெறுவதற்குக் காரணமாக இருந்த அம்சங்கள் பற்றி ஓரளவு ஆராயப்படுவதோடு இரண்டாவது பகுதியில் அமைப்பியல் ஏற்படுத்திய தாக்கங்கள் மதிப்பிடப்படுகின்றன.

*அமைப்பியல் தோற்றம் பெறுவதற்கான பின்புலங்கள்*

-அமைப்பியல் வாதத்தின் பின்புலங்கள் -

அமைப்பியல்வாதம் (structuralism) எனும் அணுகுமுறையை முதன் முதலில் பயன்படுத்தியவர் க்ளாவ்ட் லெவி ஸ்ராவ்ஸ் (Claude Levi struusss) எனும் மானுடவியல் அறிஞர். மானுடவிலயலில் இவர் பயன்படுத்திய அமைப்பியல்வாத முறையையும் கோட்பாடுகளையும் பிற கூறுகளில் தொடரோவ் (Todorov), ஜெனட் (Genette), பந்த்(Barths) போன்ற அறிஞர்கள் இலக்கிய ஆய்வுக்குப் பயன்படுத்தினர். இது இந் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர் (ஆறாம் ஏழாம் தசாப்தங்களில்) இலக்கிய அமைப்பியல் வாதம் எனும் பெயருடன் (Litarary structuralism) அறியப்பட்டது. இக்காலத்தில் இலக்கியத் திறனாய்வுகளையும், கோட்பாடுகளையும் இது வெகுவாகப் பாதித்தது. இந்த அடிப்படையில் அமைப்பியல்வாதம் தோற்றம் பெறுவதில் துணை நின்ற அம்சங்களை சுருக்கமாக நோக்கலாம்.

உருவவாதம் (Formalism)

1910-1930 ஆண்டுகளில் ரஷ்யாவில் இலக்கியத் திறனாய்வுத் துறையில் செல்வாக்குப் பெற்றிருந்த உருவவியல் அமைபியல்வாதத்திற்கு முக்கியமானதோர் ஊற்றுக்கால் ஆகிறது. "ரஷ்ய உருவவியல் அமைப்பியலில் இளம் பிள்ளை வாதம் (Infantile Disorder) என்றார் ரோமன் ஜகோப்சன். இளம் பிள்ளைவாதம் என்பதன் அர்த்தம் ரஷ்ய உருவவியலுக்கு அமைப்பியல் பின்னமைப்பியல் வரை உள்ள இடையறாத தொடர்பை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

யதார்த்தவாதமானது இலக்கியம் பிரதிபலிக்கின்ற பொருள் மீது கவனம் செலுத்திய போது உருவவியலானது இலக்கியத்தை உற்பத்தி செய்யும் பொருள் மீது கவனத்தை திருப்பியது. இலக்கியத்திலுள்ள யதார்த்தத்திற்கும் வெளியில் உள்ள யதார்த்தத்திற்கும் உள்ள சம்பந்தம் பற்றிய சர்ச்சைகள் கிளம்பின. வெளியிலுள்ள யதார்த்தம் இலக்கியத்தில் வித்தியாசமடைவதை உருவவியல் ஆராய முற்பட்டது. இவ்வாறு வித்தியாசமாவதை (Defemiliarization) "இலக்கியத்தனம்" என்று விளக்கியது. அந்த வகையில் உருவவியல் ஒரு படைப்பை இலக்கியத் தனமுள்ளதாக ஆக்கும் பண்பைப் பற்றி அக்கறை செலுத்தியது.

படைப்பிற்கும் வேறொன்றுக்கும் உள்ள உறவு பற்றிய விசாரணைகளை உருவவாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒதுக்கியது. அத்தோடு "இலக்கிய மொழி"

எனும் கருத்தியலை இது வற்புறுத்த முற்பட்டது. என்பார் ராஜ் கௌதமன். இது இவ்விதமிருக்க உருவவியலுக்கும் அமைப்பியல்வாதத்திற்கும் தொடர்பில்லை என்று சொல்வோரும் இருக்கின்றனர். யூரி லோட்மன் எனும் ரஷ்ய அமைப்பியலாளர் இவ்விதம் குறிப்பிடுவதாக முத்து மோகன் எழுதுகிறார்.

## கவிதை பற்றிய நோக்கு

கவிதை என்பது ஒரு விதமான வார்த்தைக் கலை; சொற் கலை. கவிதையியல் என்பது கவிதையை ஒரு கலைப் பொருளாகக் கருதிப் பயிலும் விஞ்ஞானம். கவிதையின் குறைந்த பட்ச அலகுகள் சொற்களே. சொற்களையும், சொற்சேர்க்கைகளையும் சொற்களின் கட்டமைப்பையும் பயிலுவது கவிதையியல்.

ஏலவே குறிப்பிடப்பட்டது போல பொருளை விட சொற்களிலேயே உருவவியல் அதிகம் கவனம் செலுத்துகின்றது. அல்லது கவிதையின் வடிவத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கிறது எனலாம். இங்கு ஷக்லோவ்ஸ்கி சொல்லுக்கு உருவம் உண்டு என்பது மனங்கொள்ளத்தக்கது.

தொடரும்...

## இரண்டு கவிதைகள்

**01. நா(வே)லி**

நாலி ஒன்று பெற்றேன்
நாதியானேன்
நாயானேன்
உணர்வுகளை
நாரை வார்த்தேன்.

**02. காடையர்**

சீதனச்
சீரற்ற அலைவரிசையில்
நயவஞ்சக நிகழ்ச்சி
செய்து
திருட்டு இலாபம்
காணும் காடையர்....

-றியாஸ் மசூர்

*அநு ராகம்*
கலை இலக்கிய இதழ்

I.M.Rahmathulla
55, Magazine Road,
Tissawewa
Anuradhapura.

படைப்பாளிகளிடமிருந்து
புதிய ஆக்கங்களை
எதிர்ப்பார்க்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நூல் மதிப்புரை

நூல் :“கட்டாந்தரை” (கவிதைகளின் தொகுப்பு)
ஆசிரியர் :கனிவுமதி
வெளியீடு :கனிதா,
15, சாவியா ஒழுங்கை,கொழும்பு-15,

-ஏ.எஸ்.ஷர்மிலா-

மலையக மண்ணின் புதிய தலைமுறைக் கவிஞர்களில் மிக முக்கியமானவராக கவிஞர் கனிவுமதி திகழ்கிறார். ஆரம்ப காலங்களில் குறிஞ்சி இளந்தென்றல் எனும் பெயரில் இலக்கிய உலகுக்குள் கால் பதித்தவர். மதி புஷ்பா எனும் ஓவியராக தன்னை இருத்திக் கொண்டவர்.

தாய் நிலமான மலையகத்தில் உழைக்கின்ற தொழிலாளர்கள் அவர்தம் வாழ்க்கை, அவர்களின் சுக துக்கங்கள், வறுமைகள், எதிர்ப்பார்ப்புகள் என அனைத்திலும் பின்னிப்பிணைந்தவனின் ஏக்கத்தின் வெளிப்பாடுதான் இந்தக் “கட்டாந்தரை”. என்று கவிஞர் நூலுக்கான பிறத்தலுக்கான காரணத்தை விவரிக்கிறார்.

“தன் சுயத்தால் தமிழ்த்தாயின் கைபிடித்து ஏதோவொரு வகையில் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டவன்; தன் முயற்சியால் தனித்து அடையாளம் பெற்ற கனிவுமதிக்கு காலமும் இளமையும் களம் தரக் காத்திருக்கின்றன.” என்று கம்பவாரிதி இ.ஜெயராஜ் முன்னுரை வழங்கியுள்ளார்.

அணிந்துரையை பேராசிரியர் சோ.சந்திரசேகரன் வழங்கியுள்ளார். இவர் அணிந்துரையில், கவிதை இரசனை உள்ளவனுக்கு, கவிதை இலக்கியத்தில் தனது உள்ளத்தையும் ஆன்மாவையும் ஒன்று படுத்தி விட்டவனுக்கு, மானிட நேயம் உள்ளவனுக்குத்தான் கவிதை வரும் என்கிறார். இப்பண்புகள் கவிஞர் கனிவுமதியிடம் வெகுவாக உள்ளதாகவும் கூறிநிற்கிறார்.

கவிஞர் கனிவுமதி இந்நூலை தனது இலக்கிய குரு தெளிவத்தை ஜோஸப் அவர்களுக்கும், கம்பன் கழகத்தின் தமிழ் பெட்டகமாக திகழும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கும் இன்னும் இலக்கிய உள்ளங்களுக்குமென்று காணிக்கையாக்கி இருக்கிறார்.

தனது தாய் மண்ணின் அவலப் பக்கங்களை கவி வரிகள் ஒவ்வொன்றும் உள் வாங்கியிருக்கின்றன.

*“தேனீர் சாயம் சிவக்க*
*தேக சாயம் வெளுக்க*
*உழைக்கிறார்கள்*
*மலைப் பெண்கள்...”*

இன்னும் 'கட்டாந்தரை' எனும் கவிதையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"*முற்செடி செழித்த*
*மண்வெடிப்பில்*
*பழைய ஊர்*
*புதைந்து கிடக்கிறது*"

பெண்ணாக தன்னை ஒரு நிமிடம் கற்பனையில் கண்டதற்கே இத்தனை கனத்துப் போன வரிகளா...
"புரிதல் எனும் கவிதையில்.

"....
*தேய்த்துத் தருகின்ற உடைகளில்*
*கசங்கல்களைப் பார்த்து*
*ஏசத்தெரிந்த உனக்கு*
*அதைவிட கசங்கித்தரி*
*அழுகிற உள்ளம் எங்கே*
*புரியப்போகிறது?*

......
*இத்தனையும் தாண்டி*
*உறங்கப் போகையில்*
*காதருகே கிசுகிசுக்கிறாய்*
*நீ ரொம்ப அழகடீ*"

தனது ஊரின் பிரிதல் நிலைகண்டு பிதற்றும் நவீனச் சித்தனாகி உலாவரும் கவிஞர் வரிகள் தெய்வ நம்பிக்கை பற்றியும் கூறி நிற்கத் தவறவில்லை..

மரணம் குறித்த எண்ணங்கள் யாருக்கில்லை? ஆனாலும் இந்நிலையின் பின் சந்தேகம் என்பது எழுவது கடினமே.

"*மரணம் குறித்த*
*சந்தேகம்*
*இத்தோடு முடிந்தது*
*இதோ....*
*பிணமாக நான்*

இப்படி பல கவிதைகளை ஆழமாகவும் அழகாகவும் மக்கள் முன் ஒப்படைத்துள்ளார் கனிவுமதி. கடைசியாக அவரே சொல்கிறார்.

"*காலத்துக்குக் காலம்*
*கட்டாயம் பிறப்பான்*
*கவிஞன்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அநுராதபுரி முஸ்லிம்களின்
கலை இலக்கிய வரலாறும்
அதன் வளர்ச்சியும்

# இலக்கியத் தடங்கள்–10

ஆய்வு- எப்.எப்.பாத்திமா ஸப்ரீனா

சென்ற இதழின் தொடர்ச்சி......

**ஜனாப் எஸ்.முஸம்மில்**

இக்கிரிகொல்லாவையைச் சேர்ந்த இவர், 1994 களில் இலக்கிய உலகில் பிரவேசித்தார். முஸம்மில், சதாத், மூசா ஆகிய பெயர்களில் இவரது ஆக்கங்கள் ஜனனி, அநுராகம், தினகரன், படிகள், வானொலி என்பவற்றில் மின்னியுள்ளன. தற்பொழுது அநுராதபுரம் ஸாஹிரா மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடைமை ஆற்றி வருகின்றார்.

**ஜனாப் முஹமட் பௌமி**

அநுராதபுரத்தைச் சேர்ந்தவர். இவர் மறைந்த எழுத்தாளர் எஜ்.எம்.ஸாலீஹ் (வித்தகர்) அவர்களது மூத்த புதல்வர். தினகரன் உள்ளிட்ட நாளேடுகளில் இவரது கவிதைகள் தடம் பதித்திருக்கின்றன. மிக நீண்ட நாற்களாக இவரது படைப்புக்கள் வெளிவராமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

**ஜனாப் அப்துல் முனாப்**

நாச்சியாதீவை சேர்ந்த இவர் ஓய்வு பெற்ற ஆசிரியர். 1983இல் வெளிவந்த 'பங்கள வளளு' எனும் பிரபல சிங்கள திரைப்படத்தின் மூலம் நடித்து எம்மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர். சிறந்த பாடகரான இவர், நல்ல நடிகருமாவார்.

**ஜனாப் எம்.காசீம்**

தற்போது வெளிநாட்டில் கடமையாற்றும் இவர் நாடறிந்த கலைஞர். பமுனுகமயைச் சேர்ந்த இவரது குரலால் வசீகரிக்கப்பட்டவர்கள் ஏராளம். இ.ஒ கூட்டுத்தாபனத்தின் "முஸ்லிம் சேவையில்" வலம் வந்த அறிவுப் பூங்கா நிகழ்ச்சித தயாரிப்பாளராகப் பல ஆண்டுகள் கடமையாற்றியதுடன் குரல் கொடுத்தும் வந்தார். பகுதி நேர அறிவிப்பாளராகவும் கடமையாற்றினார்.

ஆய்வு தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**எம். சிறீரங்கன்**
**ஹாலிஎல.**

நண்பர் நஜ்முதீன் படிகள் 09ம் இதழை கொண்டு வந்து தந்தவுடன் கடிதம் ஒன்றை எழுத வேண்டும் எனும் ஆசை பீறிட்டுப் பாய்ந்தது. இருந்தும், 10ம் இதழைப் பார்த்ததன் பிறகே சந்தர்ப்பம் கிட்டியது. 09ம் இதழுடன் ஒப்பிடுகையில் 10ம் இதழ் வளர்ச்சியான இதழாகவே தெரிகிறது. வாழ்த்துக்கள்.

கவிஞர் மேமன் கவியுடன் நட்பை பேணி வரும் கெக்கிராவ சஹானா அவர் பற்றிய குறிப்பை நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் எழுதியிருக்கிறார். தவிரவும், 'அகல்யா' அநுராதபுரம் ஸப்ரினாவின் படைப்பு, காலம் நீண்டு செல்லும் கதையாக இருப்பினும் முடிவு மனதை ஈர்க்கிறது. முற்போக்கு வாதம் பேசும் இளைஞர்கள் நடைமுறையில் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதற்கு 'பச்சோந்திகள்' சிறுகதை மூலம் நாச்சியாதீவு அபு-நுஹா அழகாக படம் போடுகிறார். அத்தோடு இக்கிரிகொல்லாவ லரீபா அபூபக்கர் அவர்களும் பாசம்- பிரிவு என்பனவற்றின் இன்றைய நிலையை சுட்டுகிறார்.

அநுராதபுரம் சமானின் ஆதங்கம் நியாயமானது. இலக்கியத் தூண்டியாக அக்கட்டுரையைக் காணலாம். எம்.சி.நஜ்முதீன் கட்டுரை மூலம் மல்லிகைக்கும் அநுராதபுர இலக்கியத்திற்குமான உறவை காணலாம். எல்.வஸீம் அக்ரம் தனது தேடல் பதிவை எனது பிரதியாக தந்திருப்பது வித்தியாசமானது.

கவிதைகளில் அனாரின் ஓவியம் வரையாத தூரிகை, ரிஸ்வானின் தூரத்துப் பச்சை, ஷர்மிலாவின் நிழல்கள் என்பன மிக கருத்தாழக் கவிதைகள். தவி ரவும் நாச்சியாதீவு பர்வீன் நூல் பற்றிய மீள் பதிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்பவற்றுடன் இலக்கியத்தடம் என்பன அநுராதபுர மாவட்ட ஆளுமைகளை எமக்கு காட்டுகின்றன.

**றியாஸ் மசூர்**
**களுத்துறை**

படிகள் இதழின் எனக்கான அறிமுகம் கிட்டியதையிட்டு, படிகள் சஞ்சிகைக் குழுவுக்கும் இதழாசிரியருக்கும் எனதினிய வாழ்த்துக்கள்; நன்றிகள். எனது கவிதையும் 10ம் இதழில் பிரசுரமாகியதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இடையறாது வெளிவரும் இவ்விதழ் மேலும் தரமானதாக வெளிவர வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இதழை மேலும் காத்திரப்படுத்த ஆசிரியர் ஆவண செய்ய வேண்டுகிறேன்.

**இளைய நிலா**
**காத்தான்குடி**

அநுராதபுர நட்சத்திர நற்பணி மன்றத்தினரால் வெளியிடப்படுகின்ற படிகள் இதழ் உண்மையிலேயே காலத்தின் கண்ணாடியாகும். இது அத்தியாவசியமானதாகும்.

நான் ஒரு இலக்கிய இரசிகன் மட்டுமல்ல வளர்ந்து வரும் இளம் படைப்பாளியாவேன். இதனடிப்படையில் தங்கள் 9,10,11 படிகள் இதழினை பெற விரும்புகிறேன்.

**மெய்மொழி**
**நாச்சியாதீவு**

நான் படிகளின் வாசகன். ஒவ்வொரு இதழையும் சிரமப் பட்டாவது எடுத்து வாசித்து முடித்து விடுவேன். படிகள் படித்து முடிக்கும் போது ஒரு தரமான இலக்கிய சஞ்சிகையை படித்து முடித்த திருப்தி என்னுள் தோன்றும்.

10வது படிகளில் இப்னு ஆயிஷாவின் கவிதை அற்புதம். நாச்சியாதீவு பர்வீன் கட்டாரிலிருந்து அருமையாய் கவிதை நெய்திருக்கிறார். இலக்கிய கட்டுரைகளை இன்னும் ஆழமாய் நல்ல தலைப்புகளில் தீட்டினால் நன்றாய் இருக்கும்.

**கோவை அன்சார்**
**கொழும்பு**

படிகள் பத்தாம் இதழ் என் கரம் கிட்டியது. இதில் முன்னிற்கும் மேமன் மகனாக மேமன் கவியின் இலக்கியத் தரம் கெக்கிராவ ஸஹானாவால் வெளிச்சம் போட்டு காட்டப்படுகிறது. அனார் தீட்டிய ஓவியம் வரையாத தூரிகை, அஷ்ரப் சிஹாப்தீனின் 'காணாமல் போனவர்கள்' கவிதைகள் பாராட்டுக்குரியது. இலக்கியம் எதனால் அநுராதபுரியில் குறைகிறது என அநுராதபுரம் சமானின் கட்டுரை இன்றைய சூழ் நிலையை வெளிச்சம் போட்டு காட்டுகிறது. நிழல்கள் கவிதை மூலம் அடையாளம் காட்டும் ஏ.எஸ்.ஷர்மிலாவின் கவிதை, எல்.வஸீம் அக்ரம்,அலுத்கம நஜ்முதீன் இவர்களின் ஆக்கங்கள் ஒரு படி மேலே நிற்கின்றன. நவீன காலனித்துவம் கார்டூன் இன்றைய சமுதாயப் படப்பிடிப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

THE BEST WISHES



# MCS INSTITUTE

ENGLISH SINHALA CLASSES


YOUR SUCCESS IS OUR PRIDE

சரளமாக ஆங்கிலம், சிங்களம்
எழுத பேச, வாசிக்க
பயிற்சியளிக்கும் வகுப்புகள்
வயதுக்கட்டுப்பாடு இன்றி வகுப்புகள் நடாத்தப்படும்

M.C.SABOORDEEN
504, ALUTHGAMA,GAMBIRIGASWEWA
ANURADHAPURA

THE BEST WISHES


அநுராதபுர நகரில் இப்பொழுது



பாடசாலை மாணவர்களுட்பட அனைவருக்குமான தமிழ் சிங்கள ஆங்கில புத்தகங்களையும்
சஞ்சிகைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள உங்களுக்கு வசதி செய்துள்ளது.

# வெலிகம புத்தக நிலையம்

(இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்னால்)
வங்கி வீதி அநுராதபுரம்
தொ.இ 025-4581469
025-2234472



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உயர்தரத்தின் பின்னர் ?

# INFO SYS COMPUTER SYSTEMS

## eDesigner

GUARANTEE

தரமான சான்றிதழ்களுடன் கூடிய பாடத்திட்டங்கள்







மும்மொழிகளிலும் கணனிக்கற்கை நெறிகள்

IT
GIT
MS Office
DCS
HTML
Designing
Multi media
Hardware
PC Professional
Visual Basic
C++
Pascal

*and many more courses*

87/24, DHARMAPALA MAWATHA, ANURADHAPURA
பழைய, தனியார் பஸ்நிலையத்தின் அருகில்

Padihal Designed By: eDesigner
Publisher of Padihal: Anuradhapura Star Welfare Association

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media